# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :- | O.S.No.68/2019 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர் | :- | வா.சா–01 (PW– 01) |
| பெயர் | :- | சரவணன் |
| தேதி | :- | 09–09–2025 |

**சான்றாளருக்கு சத்திய பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**குறுக்குவிசாரணை :–**

நான் தொழிற்கல்வி படித்துள்ளேன். பிரதிவாதியின் கணவர் என்ன தொழில்செய்கிறார் என்றால் இந்தியன் வங்கியில் நகை மதிப்பீட்டாளராக உள்ளார். பிரதிவாதியின் குடும்பத்தினரை அவரது மகன் தினேஷ் மூலமாக எனக்குத் தெரியுமா என்றால் இல்லை. பிரதிவாதியின் கணவர் விஜயகுமார் மூலம்தான் தெரியும்.

சதீஷ் என்பவர் என் வீட்டில் வாடகைதாரராக இருந்தாரா என்றால் இருந்தார். சதீஷ் மூலமாகதான் பிரதிவாதியின் குடும்பத்தினர் எனக்கு பழக்கமா என்றால் சதீஷ் மூலம் எனக்கு விஜயகுமார் மட்டும்தான் பழக்கம். சதீசுக்கும் எனக்கும் இன்றும் நல்ல பழக்கம் உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கு இல்லாமல் எனக்கு வேறு வழக்குகள் உள்ளனவா என்றால் 02 வழக்குகள் உள்ளன. அந்த வழக்குகள் நான் பணம் கொடுத்துத் திருப்பிக் கொடுக்காததால் கடன்காரர்கள்மீது தொடுத்த வழக்குகள் என்றால் சரிதான்.

வட்டித் தொழில் செய்ய நான் உரிமம் பெற்றுள்ளேனா என்றால் நான் வட்டித் தொழில் செய்யவில்லை. இதற்குமுன் நான் ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி வேறு ஏதேனும் வழக்குகள் தொடுத்துள்ளேனா என்றால்

இல்லை. நான் சொத்துக்களை கிரையம் வாங்கியுள்ளேன். 03 சொத்துக்கள் வாங்கியுள்ளேன்.

வாதி தரப்பு 01-ஆம் சான்றாவணமாக உள்ள விற்பனைக்கான ஒப்பந்தத்தை யார் தட்டச்சுச் செய்தது என்றால் தங்கராஜ் என்ற எழுத்தர் தயாரித்தார். அவருக்கும் எனக்கும் எந்தப் பிரச்சனையும் இல்லை. விற்பானைக்கான ஒப்பந்தத்தில் ஒரு சதுர அடியின் விலை இவ்வளவு என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மொத்தமாகதான் விலைப்பேசப்பட்டது

நான் வருமான வரி செலுத்துகிறேன் என்றால் சரிதான். நான் Industrial engineering projects தொழில்செய்கிறேன். நான் வாங்கிய இதற்குமுன் சொன்ன 03 சொத்துக்கள் சம்மந்தமாக வருமான வரிக் கணக்கில் காட்டியுள்ளேன் என்றால் சரிதான்.

இந்த வழக்கிலுள்ள விற்பனைக்கான ஒப்பந்தத்திற்கு பணம் கொடுத்ததை வருமான வரி கணக்கில் காட்டியுள்ளேனா என்றால் இல்லை. ஒப்பந்தச் சொத்து பிரதிவாதிக்கு எப்படி சொந்தம் என்றும் காட்டும் மூல அவணங்களை பார்த்தேன். ஒப்பந்தம் ஏற்பட்டபோது மூல பத்திரத்தை என்னிடம் பிரதிவாதி கொடுத்தார். அந்த ஆவணத்தை இந்த வழக்கில் நான் தாக்கல்செய்துள்ளேன். நான் மூல பத்திரத்தைத் தாக்கல்செய்யவில்லை என்றால் சரியல்ல.

இந்த வழக்கு நிலுவையில் இருந்துவரும் நிலையில் ஒப்பந்தச் சொத்தை விற்க நான் பல தரகர்களை அழைத்துச் சென்று ஒப்பந்தச் சொத்தைக் காட்டினேன் என்றால் இல்லை. எனக்கு எத்தனை வங்கியில் வங்கிக் கணக்கு உள்ளது என்றால் இந்தியன் வங்கியிலும் ICICI வங்கியிலும்

வங்கிக் கணக்கு உள்ளது. என் வங்கிக் கணக்கில் பணம் உள்ளது என்று காட்டும் விதமாக நான் வங்கிக் கணக்கு விவரங்களை இந்த வழக்கில் தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான்.

எனக்கும் பிரதிவாதிக்கும் பணம் கடன் கொடுத்து வாங்கும் உறவுதான் இருந்தது என்றும் பணம் கடன் கொடுத்ததற்குதான் மூலப் பத்திரத்தை நான் வாங்கினேன் என்றும் சொன்னால் சரியல்ல. வழக்குச் சொத்து சேலத்தில் இருந்து நாமக்கல் செல்லும் தேசிய நெடுஞ்சாலைக்கு அருகில் உள்ளது என்றால் சரிதான். அந்தப் பகுதியில் ஒரு சதுர அடி இடத்தின் விலை 10,000 உரூபாய் இருக்குமா என்றால் தற்போது எவ்வளவு என்று எனக்குத் தெரியவில்லை.

விற்பனைக்கான ஒப்பந்தம் ஏற்பட்டபோது வழக்குச் சொத்தானது ஒரு சதுர அடிக்கு 5000 உரூபாய் விலைமதிப்புக்கொண்டதாக இருந்தது என்றால் இல்லை. அங்கு அப்போது எவ்வளவு இருந்தது என்றால் எனக்குத் தெரியவில்லை. ஆனால் 5000 உரூபாய் இல்லை.

( பிரதிவாதி தரப்பு வழக்குரைஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்குவிசாரணை நிறுத்திவைக்கப்படுகிறது)

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.